செயற் பொறியாளர் (வே.பொ)(பொ) தூத்துக்குடி, அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு.பா.கிளாட்வின் இஸ்ரேல், பி.இ.,(விவ)

செ.மு.ஆணை எண். இ/3033/2023(2) நாள்:28.11.2024

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி போட்டித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்றது (அறிவிப்பு எண் : 07/2022 நாள் : 30.03.2022) - திரு.தி.அருண்பாண்டி, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) அவர்களுக்கு பணிவரன்முறை செய்து - ஆணையிடல்

பார்வை:
1. வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: அநிபி5 /92705/2023 நாள்:08.12.2023
2. தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: அப2/49207/2023 நாள்: 14.12.2023
3. செயற்பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண்: இ/3033/2023 நாள்: 26.12.2023
4. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்:அபபி3 /95057/2019 நாள்:02.08.2019
5. தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் கடித எண்: அப3/29243/2019 நாள்:20.08.2019
6. உதவி செயற்பொறியாளர்(வே.பொ), கோவில்பட்டி அவர்களின் கடித எண்: ஆ/1881/2023 நாள்: 29.12.2023
7. உதவி செயற்பொறியாளர்(வே.பொ), கோவில்பட்டி அவர்களின் கடித எண்: ஆ/1881/2023 நாள்: 21.11.2024

----------

**ஆணை:**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி -4 நேரடி போட்டி தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு (அறிவிப்பு எண் : 07/2022 நாள் : 30.03.2022 தேர்வு நாள்: 24.07.2022) பார்வை(1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(2)-ல் காணும் செயல்முறை ஆணையின் படி செயற்பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(3)-ல் காணும் செயல்முறை ஆணையின் படி உதவி செயற்பொறியாளர்(வே.பொ), கோவில்பட்டி அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.தி.அருண்பாண்டி அவர்கள் பார்வை(6)-ல் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர்(பி.அ)-ஆக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), கோவில்பட்டி 28.12.2023 முற்பகல் பணியில் சேர்ந்துக்கொண்டார்.

பார்வை (4) மற்றும் (5)-ல் காணும் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி, திரு.தி.அருண்பாண்டி, இளநிலை உதவியாளர்(பி.அ) அவர்களுக்கு இளநிலை உதவியாளர்(பி.அ) பதவியில் 28.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.